# முன்னுரை

வீரமாமுனிவர் இந்தியத் தென்னகத்திற்கு வந்தது தெரியுமாறில்லை. பலரும் பல விதமாக எழுதுகிறார்கள். அவர் எழுதிய ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம் - மூலமும் உரையும் கி. பி. 1730 என்பது தெரியும். எல்லாரும் எல்லாவகையாலும் எழுதுகின்றார்கள்: இயம்புகின்றார்கள். எல்லாருஞ் சரி.

வீரமாமுனிவர் எழுதியது செந்தமிழ் இலக்கணம். கையாண்ட மொழிப் பிரயோகம் கடுமையானது. சூத்திரங்கள் சந்திகள் பிரித்துப் பொருள் காண்பது இலகன்று. மூலமும் உரையும் சேர்ந்தும் பிணைந்தும் குரூரமானவை. சொற்கள் யாவும் இணைந்தும் பிணைந்தும், புணர்ந்தும் எழுதப்பெற்றன. உரை முற்றாக முழுமையாக, எழுதுகின்றார். இயன்றமட்டும் நிலைமொழி வருமொழிப் புணர்ச்சி இலக்கணம் பேணுகின்றார். பல பதிப்புகள் வெளிவந்தன: பிழைகள் மலிந்திருக்கின்றன. சரிகள் பொலிந்துமிருக்கின்றன.

வேதகிரி முதலியார் கி. பி. 1838 - சரியான விளம்பி வருடம் புதுவையிற் பதிப்பித்தார். இது முதலாம் பதிப்பு எம்மிடமுண்டு. பதிப்பகம் குறிப்பிடவில்லை.

வேதகிரி முதலியார் இட்டு இருவர் வேற்றுமையாக எழுதியுள்ளனர். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் எழுதியது - தமிழ்ப் புலவர் சரித்திரம். இஃது எழுதியது 1916. வேதகிரி முதலியார் புலவர் ஒருவர். அவருக்குப் பக்கம் ஒன்பது ஒதுக்கியிருக்கிறார் (–179-187-) பல சூத்திரங்கள் மனப்பாடமாக வைத்திருக்கிறார். பல மேற்கோள் நூற்பாக்கள் இயம்புகின்றார்.

மற்றையவர் உ. வே. சா. எனப்படும் டாக்டர் உ. வே. சாமிநாதையர். அவர் எழுதியது, மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரம். உ. வே. சா. குருபத்தியாக இருக்கலாம். ஏற்றுவதும் மாற்றுவதும் உ.வே.சா. அவர்களின் குறை. அரைகுறை பக்கம் எழுதுகிறார். (–117ம் பக்கம்-). மூரண்பாடான செய்தி.

எழுத்ததிகாரம் இலவசப் பதிப்பு 1991 வைகாசி மாதம் வெளிவந்தது. (1) புலுதம் - பக்: 12 - திருத்தப்பட்டு பதிப்பிக்கலாயிற்று. எல்லாப் பதிப்புகளிலும் 'புலிதம்' என்றே அச்சிலே வெளிவந்தது. கீழ்க்குறிப்பெழுதவில்லை.

இப்போது சொல்லதிகாரம் வெளிவரலாயிற்று. முதலாம் பதிப்பைப்பற்றிய எல்லாச் சங்கதிகளையிட்டுக் கூறுவது பொருத்தம் என்று நினைக்கின்றோம்.

வீரமாமுனிவர் வேண்டுழி வேண்டுழி மாற்றியமைக்கின்றார். ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம் என்று பெயரிட்டிருக்கிறார். தொன்னூல் விளக்கம் என்பதன் பொருள் மயக்கம் உடைத்து.

தொன்னூல் விளக்கம் = தொன்மை + நூல் = தொல் + நூல் = தொல் > தொன்
தொன்னூல் விளக்கம்.
சிறப்புப்பாயிரம் பார்க்குக.

முந்தை நூல்களுக்கு விளக்கம் என வீரமாமுனிவர் கூற்று.

புதியதோர் நூல். புதுமைக்குப் பல உதாரணங்கள் தருகின்றோம்:

1. சாரியை — தொல்காப்பியம், ஏழு: புண. 119 சூத்திரம் - சாரியை மொழியே -
நன்னூல்: எழு. உருபு: சூத். 244.
இலக்கண விளக்கம்; எழு: சூத். 59.
தொன்னூல் விளக்கம்: சொல்: சூத். 52. இடைச் சொல் என்பர்.

---

(1) யாழ்நூல் - விபுலானந்த அடிகள் எழுதியது. அந்நூலிலே 373ம் பக்கத்தில் புலுதம் என்று எழுதப்பட்டுள்ளது.
உவின்சுலோ அகராதியில் புலுதம் – அளபெடை. புலுத என்து சங்கதத்தில் அழைக்கப்படும்.

2. பண்புச் சொற்களை நன்னூலே எழுத்ததிகாரத்திலே பதவியலிற் சொல்லியிருக்கிறார். நன். எழு. சூத். 136 வீரமாமுனிவர் செய்த தொன்னூல் விளக்கத்திலே சொல்லதிகாரத்திலே 92ம் சூத்திரத்தில் பேசுகின்றார்.

3. சுட்டு, வினா எழுத்துக்களை — நன்: எழு: சூத். 66, 67.
தொன் விள. சொல்: சூத். 100 – 102.

4. பொருளதிகாரத்திற் பெருமாற்றம் புனைந்துரைக்கின்றார்.

அ. அறம், பொருள். இன்பம், வீடுபயப்பதே பொருள்.

ஆ. வழக்கு, தேற்றம், தோற்றம் — ஒழுக்கு, வழக்கு, தண்டம்.

இ. இயல்பு, வகை, பொது, சிறப்பு, உவமை, புறநிலை, எதிர்நிலை, கருவி, காரியம், காரகம், முன்னவை, பின்னவை — 12 வகையாக அகத்திணை ..

ஈ. உரிமை — காலம், இடம், பண்பு, ஒழுக்கு, இறை — 5 வகை.

உ. சொல்லுரிமை...
சொல்லுரிமையிலே சூத்திரம்; 196. இதில் இனப்பொருள் வினைச்சொல் உரிமையாமாறு உணர்த்தும். பொருளதிகாரம்.
தொல்: சொல்: கிளவி: சூத். 46.
நன்னூல்: பொது: சூத். 389.
இல: விள: சொல்: பொது: சூத். 319.

ஊ. அறுவகைப்பொழுது — அவ்வப்போது பாடப்படும் இராகங்கள்.
சூத். 173 – யாழ் நூல், விபுலானந்த அடிகள் எழுதியது. மேற்கோள்.

5. செய்யுளியல்பை சிந்தனைக்குரிய மாற்றங்கள் செய்கின்றார்.

அ. ஐவகைப் பா என்கிறார். — சூத். 219. மகாபாரதம் வில்லி.
சிறப்புப்பாயிரம்: 15ம் பாடல்.

ஆ. தாழிசை, துறை, விருத்தம் என்பனவற்றைத் துறை. தாழிசை, விருத்தம் என்கிறார். பாவினம் தனிமையாகக் கூறுகின்றார்.

6. அணியிலே முதற்கண் சொல்லணி முன்னர் கூறினார்.

அ. பொருளணியில் — 30 அணிகள்.

7. புறனடை — புறன்+நடை } இரண்டும்
புறநடை — புற+நடை } கையாள்கின்றார்.

இவ்வாறு வழங்கிவந்த தொன்னூல் விளக்கம் பதிப்புகளில் மாற்றம் இயங்கிக் கொண்டேயிருக்கும். முதலாம் பதிப்பில்

சொல்லதிகாரம்:

52ம் சூத்திரத்திலும் உரையிலும் எ என்பதனை ஏ என்று திருத்தல் வேண்டும்.

82ம் சூத்திரம் — உரை: நூற்களிலடங்குந்தன்மை
நூல்களிலடங்குந்தன்மை - என்று திருத்தம்.

87ம் சூத்திரம் — உயிரெனிலன்னு என்பதனை
உயிரெனிலந்து எனத் திருத்தல்வேண்டும்.
அகத்தியம் — சூத். 160.
வீரசோழியம் — சூத். 11. சொன்னமொழி.
நேமிநாதம் — நேர்ந்த மொழிப் பொருளை...
குவலயானந்தம் — சூத். 86 முதலியன.
உதாரணங்கள்: அநகன், அநாதி, அநாசாரம் திருத்தம் முதலியன.

பொருளதிகாரம்:

155ம் சூத்திரம் — குறள்: சலத்தாற் பொருள்...
119ம் சூத். அதே குறள் — திருத்தப்படல்.

178ம் சூத்திரம் — முதிரை — உரையில், காராமணி 3ம் பதிப்பு. யார் திருத்தியது?

198ம் சூத்திரம் — உரையில் — தொல்காப்பியம் மேற்கோள்.
இவ்வகைச் சூத்திரம் அச்சுப்பிரதியிலுமில்லை.

யாப்பதிகாரம்:

217ம் சூத்திரம் — உரை: குனிக்கச் சொன்ன...
குணிக்க திருத்தம்.

223ம் சூத்திரம் — நிலமண்டிலம் — நிலைமண்டிலம்
திருத்தம். இலாத்தின் செந்தமிழ் — நிலைமண்டிலம் என்றார்.

227ம் மேலே — கலிப்பாவிலக்கணம் வருமாறு — சேர்க்கப்படல் வேண்டும்.

295ம் சூத்திரம் — உரை: ஈற்றிலுள்ள கார்த்திகை என்னும் மொழிக்குப் பக்கத்தில் —
'முதலாக ஆயிலியம் ஈறாக எழுநாளும் கற்கடகம்' எனச் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். இடையிலே முறிகிறது.

299ம் சூத்திரம் — உரை: சித்திரக்காவே விசித்திரக்காவே எனும் உரையில் வரும்போதெல்லாம் —
சித்திரப்பாவே விசித்திரப்பாவே என்று திருத்திக்கொள்ளல் வேண்டும்.

இவை எல்லாம், பதிப்புகளில் வேண்டியபோது திருத்தம் அடைதல் சாலாக்கருமம்.

காபன் அய்யர் அங்கில மொழியில் இடை இடையே சேர்த்துக்கொண்டு தலைப் பெயர்களை விளங்கப்படுத்தியுள்ளார். ஆங்கிலமொழிப் பிரயோகம் காபன் அய்யர் அவர்களையே சாரும். வீரமாமுனிவர் அல்லர்.

வீரமாமுனிவர் ஐந்திலக்கணத்தொன்னூல் விளக்கம் என்ற நூலில் 370 சூத்திரங்களில் முந்தை நூல்களுக்கு விளக்கம் விழைகின்றார்; விளைகிறார். எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணம் இயற்றமிழுக்குரிய இலக்கணம். வியப்பு என்னே!

தொல்காப்பியம்:

| | | |
|---|---|---|
| இளம்பூரணர் | சூத்: | 1595. |
| நச்சினார்க்கினியர் / பேராசிரியர் | ,, | 1611. |
| தொல்காப்பிய — நன்னூல் | ,, | 1583. |
| நன்னூல் | ,, | 462. |
| இலக்கண விளக்கம்: எழு. சொல் | ,, | 372. |

இவ்வாறாக தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணம் பேசுகின்றபோதிலும் குறைந்தளவு சூத்திரம் பொருந்தியது; நிறைந்த பொருள் விளக்கம்.

வாய்ப்பு ஏற்படின் மற்றைய மூன்று அதிகாரங்கள் — பொருள், யாப்பு, அணி — அச்சிட முயன்றுள்ளேன். ஏலவே வெளியிடுதல் வேண்டுமென்றும் காலம், வசதி, வாய்ப்பு இடங்கொடுத்தால் முயன்று பார்ப்போமாக.

127, மத்திய வீதி,
மட்டக்களப்பு,
6-1-1992.

F. X. C. நடராசா.

இதழ், எ-து. கண்ணிமை, உதடு, பூவிதழ், பனைகட்குமுரித்து. ஓலை, எ-து. பனை, தெங்கு, தாழைகட்குமுரித்து.

ஈர்க்கு, எ-து. தெங்கு, பனை, மாவென்பவற்றிற்குமுரித்து.

மடல், எ-து. பனை, தெங்கு, கமுகு, மூங்கில், வாழை, தாழை, ஈந்திற்குமுரித்து.

பாளை, எ-து. தெங்கு, கமுகுகட்குமுரித்து.

குரும்பை, எ-து, தெங்கு, பனைகட்குமுரித்து.

குலை, எ-து. தெங்கு, கமுகு, வாழை, ஈந்து, பனை, காந்தட்குமுரித்து.

தாறு, எ-து. கமுகு, வாழை, ஈந்திற்குமுரித்து.

சுளை, எ-து, பலா, பருத்தி, பாகற்பழங்கட்குமுரித்து.

வீழ், எ-து. ஆல், இறலி, தாழை, சீந்தில்கட்குமுரித்து.

(1) நுகும்பு, எ-து. பனை, வாழை, மரல், புல்லென்பனவற்றிற்குமுரித்து.

இலை, எ-து. தெங்கு, ஈந்து, பனைகட்குமுரித்து.

அடை, எ-து. தாமரை, ஆம்பல், நெய்தற்றோடக்கத்துக்கு முயிர்நிலையோ ரறிவுகட்குந் தாம்பூலத்திற்குமுரித்து.

பொருட்டு, எ-து. தாமரைக்கும், கோங்கிற்குமுரித்து.

குரல், எ-து. பெண்டீர்மயிர், மிடறு, தினை, வரகு, பூளை, நொச்சி, புதவம்புற்கட்குமுரித்து.

நெல், எ-து. சாலித லியவற்றிற்கும், மூங்கிற்கும், ஐவனத்திற்குமுரித்து.

இவையெலா முறுப்புச் சொற்களாகி இவ்வாறு வருவது மரபெனப்படும்.

இவ்வாறன்றி, (உ-ம்) எருமைக்கை, குதிரைநுதல், கமுகோலை, பலாக்குலை, மாந்தாறு, வாழைச்சுளை, புல்லிலை முதலியவற்றின் மரபுவழுவாம். இவ்வாறே முன்னோர் காட்டிய வழியைப்பற்றியதற்கதற்குரிய சொல்லுதல் மரபெனப்படும். (அன்றியுமிதற்குப் பொருளதிகாரத்திற் சொல்லுரிமை விளக்கிய வழியைக் காண்க.) எ-று. (௩௨)

முதலாவது: — வேற்றுமையியன் — முற்றிற்று.

---

## இரண்டாவது:—
# பகுபதப்பெயரியல்

**83. பகுபத மொன்றாய்ப் பலவொருங் குணர்த்திற்**
**பகாப்பத மவற்றுட் பகுதி யென்ப.**

(இ-ள்.) பகுபதப்பகுதிகளாமாறுணர்த்துதும்.

(உ-ம்) கூனி, எ-து. கூன், இ, எனப்பகுதி விகுதியான் முடிந்தது. உண்டான், எ-து. உண்-ட்-ஆன், என வவ்விரண்டுட னிடைநிலைபெற்று முடிந்தது. உண்டனன், எ-து. உண்-ட்-அன்-அன், என வம்மூன்றுடன் சாரியை பெற்றுமுடிந்தது. பிடித்தனன், எ-து. பிடி-த்-த்-அன்-அன், என வந்நான்குடன் சந்திபெற்று முடிந்தது. நடந்தனன், எ-து. நட-த்-த்-அன்-அன், என வவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகர வல்லொற்றுமேல் லொற்றுதலாகி விகாரமும் பெற்றுமுடிந்தது.

பொருளாதி யறுவகைப்பகாப் பதங்களே பகுபதங்கட்குப் பகுதிகளாம். அவை: — பொன், மணி, முதலிய பொருள்களும்; குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என

---

(1) நுகும்பு = குருத்து.

நன்னூல். — "அவற்றுள். முதலினுன்கு மீற்றின் மூன்றும், வினைமுதல் கொள்ளும் பிறவுமேற்குப்பிற." எ-து. மேற்கோள். எ-று. (ச)

**121. எதிர்மறை யெச்சத் தியலும் விகுதி
யாமலா தாமை யாவென நான்கே.**

(இ-ள்.) ஒருவினைத் தொழிலை நீக்குதற் கெதிர்மறையாகவரும் வினையெச்ச விகுதி களா மாறுணர்த்துதும்.

ஆமல், ஆது, ஆமை, ஆ, யெதிர்மறை வினையெச்சங்களாம்.

(உ-ம்) செய்யாமல், உண்ணுமல், எ-ம். செய்யாது, உண்ணுது, எ-ம். செய்யாமை, உண்ணுமை, எ-ம். செய்யா, உண்ணு, எ-ம். கூருமல், என அல் விகுதி வருதலுங்கொள்க.

"வரந்தரு முனிவனெய்த வருதலும் வெருவிமாயா, நிரந்தர முலகினிற்கு நெடும் பழி பூண்டா நின்ருன்.' ஈண்டு, மாயாமல் என்பதற்கு மாயாவென்றது காண்க. எ-று. (ரு)

**122. வரல்தரல் மூவிட மாவு நற் குரிய
செலல் கொடை சேரும் படர்க்கை யொன்றே.**

(இ-ள்.) இடம்வழுவாமற் காத்தலாமாறுணர்த்துதும்.

ஈண்டுவினையியல்புரைப்புழி நால்வினை யுரிமையை விளக்குதன் முறையே யாகையில் வருதல், தருதல், என விருவினைச்சொல் தன்மை முன்னிலை படர்க்கையை யணைந்து வரும்.

(உ-ம்) எனக்காடை வந்தது, நினக்கணிவந்தது, அவனுக்குப் பொன் வந்தது, எ-ம். எனக்குத் தந்தான், நினக்குத் தந்தான், அவனுக்குத் தந்தான், எ-ம். வரும்.

செல்லுதல், கொடுத்தல், என விருவினைச் சொல் படர்க்கைப் பெயரை யணைந்து வரும். (உ-ம்) அவனிடத்துச் சென்ருன், அவனுக் காடைகொடுத்தான், எ-ம். வரும். எனக்கு நினக்கு மாடை கொடுத்தா னெனவரின் வழுவாம்.

நன்னூல். — "தரல்வரல் கொடை செலச்சாரும் படர்க்கை, யெழுவாயிரண்டு மெஞ்சியவேற்கும்." எ-து. மேற்கோள். எ-று. (சு)

மூன்ருவது: ஈரெச்சம். — முற்றிற்று.

---

## நான்காவது:-
## வினைக்குறிப்பு

**1 3. வினைக்குறிப் பென்ப வினைபோல் விகுதி
பெற்றிடம் பாற்தும் பெயர்ப்பகு பதமே.**

(இ-ள்.) வினைக்குறிப்பா மாறுணர்த்துதும்.

மேலே பெயர்ப்பகுபதங்களை விளங்கிய விடத்தில் அவையெலா மற்றைப் பெயர் களைப்போலே வேற்றுமை யுருபு பெறுவனவன்றியே வினையைப்போல நடப்பனவா மென் பதாயிற்று; அங்ஙன நடப்புழி வினைக்குறிப் பெனப்படும். இவையே பெயரியவிசைத்த சொல் லாயினும் வினையின் றெழிலைக் குறிப்பனவும் வினையைப்போல நடப்பனவு மாதலையில் வினையை விளக்கிய விடத்து வந்த முறையெனக் காண்க. வினைக்குறிப்பெல்லா மூவிடத் தைம்பால் வினைச்சொற்கேற்ற விகுதியைப் பெற்றுமுடியும்.

---

வினைக்குறிப்பு=குறிப்பு வினை

